# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.133/2025

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்திகா | Father's Name | : | கருப்பையா |
| Village | : | திருமானூர் | Taluk | : | அரியலூர் |
| Calling | : | | Age | : | 49 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 06th day of April 2026.**

**(Accused present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.3, Dated 06.04.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அரியலூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 2039, நாள் 06.04.2026 ன்படி திருமதி கார்த்திகா அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

SELVA MUTHU KUMARI    Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:38:42 +0530

அரியலூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திருமதி P.தென்னகசங்கீதா (Translator) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம் திருமானூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2024 அன்று திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது 17.00 மணிக்கு தலைமை காவலர்கள் தனசேகரன், சுரேஷ் மற்றும் முதல்நிலை காவலர் 881 சத்தியராஜ் ஆகியோருடன் திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் சரகத்திற்குட்பட்ட சேவிக்காடு மருத்துவமனை தெருவில் ரோந்து பணியிலிருந்தபோது சேவிக்காடு மருத்துவமனை தெருவில் கதவு எண் 224 வீட்டில் பரமசிவம் என்பவர் சாராய விற்பனை செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் அந்த வீட்டை கண்காணித்து வந்தபோது அந்த வீட்டில் நின்று கொண்டிருந்த நபர் போலீசாராகிய எங்களை கண்டதும் மறைய எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க தன் பெயர் பரமசிவம் என கூறினார். அந்த வீட்டிலிருந்து ஒருவிதமான நெடியுடன் கூடிய வாடை வீசியதால் சந்தேகத்தின் பேரில் வீட்டிற்குள்ளே சென்று பார்த்தபோது சுமார் 100 லி. பிடிக்க கூடிய 2 நீல நிற பேரல்களில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:38:48 +0530

தலா 100 லி. வீதம் சாராய ஊறல் இருந்தது. அதற்கருகில் கேஸ் அடுப்பு ஒன்றும், சிறிய டியூப்படன் கூடிய ஒரு பாத்திரமும் தலா 1 லி. பிடிக்க கூடிய 3 பிளாஸ்டிக் பாட்டில்களில் 2 பாட்டில்களில் 1 லி. வீதமும் ஒன்றில் ½ லிட்டருமாக வெள்ளை நிற திரவம் இருந்தது. அதை முகர்ந்து பார்க்க சாராய வாடை மற்றும் ஒருவித விஷ நெடியுடன் கூடிய வாடை வீசியது. மேலும், அந்த இடத்தில் அலுமினிய பானை பெரிது 1, சிறிது 1, 20 லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற Empty பிளாஸ்டிக் கேன் ஒன்றும் இருந்தது. அவரிடம் விசாரித்தபோது தான் கடந்த 23 ஆண்டுகளாக டெய்லர் தொழில் செய்து வந்ததாகவும் பிறகு அதில் நஷ்டம் ஏற்பட்டு பல வியாபாரங்கள் செய்து வந்ததாகவும் அதிலும் நஷ்டம் ஏற்பட்டதால் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சிறிய அளவில் கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சி அதில் போதை மாத்திரைகளை கலந்து 1 லி. ரூ.500/-க்கு விற்பனை செய்ததாகவும் அதில் அதிக லாபம் கிடைத்ததால் கடந்த 10 நாட்களுக்கு முன்பு 200 லி. ஊறல் போட்டதாகவும் இப்போது மாட்டிக் கொண்டதாகவும் சொன்னார். 17.10 மணிக்கு அதே இடத்தில் உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்தும் 17.15 மணிக்கு சாட்சிகள் தனசேகரன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் எதிரி பரமசிவம் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:38:53 +0530

அதில் நான் விற்க வைத்திருக்கும் 2½ லி. எரி சாராயத்தையும், 200 லி. சாராய ஊறலையும் தங்களிடம் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8**. பின்னர் சம்பவ இடத்திலிருந்து மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் சா.பொ.1 முதல் சா.பொ.5 யை அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். 18.15 மணிக்கு 200 லி. சாராய ஊறலில் மாதிரிக்கு தலா 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதமும் 3 பிளாஸ்டிக் பாட்டில்களில் இருந்த 2½ லி. சாராயத்திலிருந்து தலா 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO ஷீல் வைக்கப்பட்டது. மேற்படி 4 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.6 முதல் சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 18.45 மணிக்கு 3 பிளாஸ்டிக் பாட்டில்களில் இருந்த 2½ லி. சாராயத்தில் மாதிரிக்கு எடுக்கப்பட்டது போக மீதமுள்ள 1½ லி. சாராயத்தையும் பேரல்களில் இருந்த 200 லி. சாராய ஊறலில் மாதிரிக்கு எடுத்தது போக மீதமிருந்த 199 லி. சாராய ஊறலையும் திருத்துறைப்பூண்டி தாலுகா காவல் ஆய்வாளர் மாரிமுத்து முன்னிலையில் அ.சா.ஆ.3 அழிப்பு மகஜரின்படி கொட்டி அழிக்கப்பட்டது. சா.பொ.1 முதல் சா.பொ.9 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.9**. பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:38:58 +0530

வந்து 20.30 மணிக்கு எதிரி மீது திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய கு.எண் 473/2024, பாநிச பிரிவு 123, 4(1)(A), 4(1)(C) TNP Act ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.10**. 03.09.2024 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரமணி, தமிழ்வாணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.11**. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12**. 02.09.2024 அன்று தலைமை காவலர்கள் தனசேகரன், சுரேஷ் முதல் நிலை காவலர் சத்தியராஜ், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 03.09.2024 அன்று சாட்சிகள் வீரமணி, தமிழ்வாணன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 24.09.2024 அன்று Junior Scientific Officer செந்தில்பாபு, முதல்நிலை காவலர் சத்தியராஜ், டாக்டர் பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 31.12.2024 அன்று எதிரி மீது பாநிச பிரிவு 123, 4(1)(A), 4(1)(C) TNP Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சி தமிழ்வாணன் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:39:03 +0530

**குறுக்கு விசாரணை**

110 லி. பிடிக்க கூடிய 2 பிளாஸ்டிக் பேரல்களில் சாராய ஊறல் இருந்ததாக வழக்கு என்றால் சரிதான். அந்த 2 பேரல்களையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பேரல்களில் சாராய ஊறல் எதுவும் எதிரி வைத்திருக்கவில்லை எனவும் அதனால்தான் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் தவறு. இந்த வழக்கில் முதல் தகவலறிக்கை பதிவு செய்த நேரம் 02.09.2024 அன்று இரவு 8.30 மணியென்றால் சரி. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறப்படும் நேரம் 02.09.2024 மாலை 5.15 மணியென்றால் சரி. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கு.எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. நான் சொல்வது போல் ஒப்புதல் வாக்குமூலம் எதிரியால் கொடுக்கப்பட்டதல்ல எனவும் காவல் துறையினரால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது எனவும் அதனால்தான் 02.09.2024 அன்று மாலை 5.15 மணிக்கு தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் கு.எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. 2 பிளாஸ்டிக் பாட்டில்களில் வெள்ளை நிற திரவம் வைத்திருந்ததாக வழக்கு என்றால் சரி. அந்த 2 பிளாஸ்டிக் பாட்டில்களையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் புகார்தாரர் மற்றும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:39:12 +0530

புலன் விசாரணை அதிகாரி இரண்டுமே நான்தான் என்றால் சரி. பெரும்பாலான சாட்சிகளும் என்கீழ் பணிபுரியும் காவல் துறையினர் என்றால் சரி. தனிநபர் சாட்சிகள் யாரையும் சம்பவ சாட்சியாக விசாரிக்காமல் உண்மைக்கு மாறான சங்கதிகளை கொண்டு எதிரி மீது வழக்கு பதிவு செய்து குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:39:17 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.